## புத்தக சேமிப்புத் திட்டம்!




தமிழில் முக்கியமான அரசியல், இலக்கிய, திராவிட இயக்க நூல்களை மக்கள்பதிப்பாகக் குறைந்த விலையில், வெளியிட்டு வருகிறது சீர் வாசகர் வட்டம். அதன் முன்னெடுப்பில் இரண்டாவது ஆண்டுக்கான புத்தக சேமிப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 500 பேர் வரை இந்தத் திட்டத்தில் இணையலாம். மார்ச் முதல் டிசம்பர் வரை மாதந்தோறும் 600 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு மொத்தம் ரூ.6,000 செலுத்தி, அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறும் சென்னை புத்தகக் காட்சியில் ரூ.8,000 மதிப்புள்ள நூல்களை வாங்கிக் கொள்ளலாம் என சீர் வாசகர் வட்டம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் 10-ஆம் தேதிக்குள் தொகையைச் செலுத்த வேண்டும். சேமிப்புத் திட்ட உறுப்பினர்களுக்கு, சீர் வாசகர் வட்டத்தின் மக்கள்பதிப்பு நூல்களில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. தமிழின் முக்கியமான 30-க்கும் மேற்பட்ட பதிப்பகங்களில் இருந்து தங்களுக்கான நூல்களைத் தேர்வு செய்யலாம். அதில் நான்காயிரம் ரூபாய்க்கான நூல்கள் சீர் வாசகர் வட்டத்தின் தேர்வாக இருக்கும். மீதம் நான்காயிரம் ரூபாய்க்கான நூல்களை வாசகர்கள் தேர்வு செய்யலாம்.

கடந்த ஆண்டு முதன்முதலாக தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் 230 பேர் இணைந்து நூல்களைப் பெற்றுள்ளனர். சென்னை புத்தகக் காட்சிக்கு நேரில் வந்து புத்தகங்களை வாங்க இயலாதவர்கள், நூல்களைத் தேர்ந்தெடுத்து தெரிவித்தால், அஞ்சல்வழியாக அனைத்து ஊர்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது. அதனால், சென்னை புத்தகக் காட்சிக்கு வர இயலாதவர்களும் நூல்களை வாங்குவதற்கான வாய்ப்பாகவும் இம்முன்னெடுப்பு அமைந்துள்ளது.

மேலும் விவரங்களுக்கு 95663-31195, 96006-52285 என்ற எண்களில் வாட்ஸ் அப்பில் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெறலாம்.

## :ப்ளாஷ்பேக்





ராஜா

### தளபதி அவர்களுடன் ஒரு புகைப்படம்!

1992-ஆம் ஆண்டு அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போது, பல்வேறு இடங்களில் கொடியேற்றி வைத்து உரையாற்றினார், கழகத் தொண்டர் ஒருவரின் இல்லத்திற்கு வருகை தந்த போது, தளபதி அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. அப்போது நான் திருபுவனம் ஒன்றியம், கானூர் கிளைக் கழக அமைப்பாளராகப் பொறுப்பாற்றி வந்தேன்..

**- ராஜா, திருபுவனம் ஒன்றியம், சிவகங்கை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞரின் எடைக்கு எடை நிதி!

1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்போது, நெய்வேலியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கழக வளர்ச்சி நிதியாக கலைஞரின் எடைக்கு எடை பல்வேறு வகையான நாணயங்கள் வழங்கப்பட்டன. அவற்றின் மதிப்பு 3,168 ரூபாய். இதற்குமுன்பு ஒருமுறை சென்னை, வடபழனியில் நடைபெற்ற கூட்டத்தில் கலைஞரின் எடைக்கு எடை என 1,400 ரூபாய் கழக வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டிருந்தது.

# மாநாடு

ர.பிரகாசு **52**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்



## கடவுளுக்குத் தரகர் எதற்கு?

செங்கல்பட்டில் நடைபெற்ற'முதல் சுயமரியாதை மாநாடு' இயக்கத்தின் லட்சியங்கள், கொள்கைகளைப் பட்டிதொட்டியெங்கும் பரப்பியது. பார்ப்பனிய மேலாதிக்கத்திற்கு எதிரான மனநிலையை அலை அலையாய் தட்டியெழுப்பியது. அந்த உணர்வலைகளை, அப்படியே பிரதிபலிப்பதாக இருந்தது, அடுத்த ஒரு மாதத்தில் நாகர்கோவிலில் நடைபெற்ற 'திருவிதாங்கூர் சமுதாய சீர்திருத்த மாநாடு'.

1929-ஆம் ஆண்டு டிசம்பர் 17, 18 ஆகிய இரண்டு நாட்கள் மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவர் பி.சிதம்பரம் பிள்ளையின் பங்களாவிற்கு மேற்கே வெள்ளை- சிவப்புத் துணிகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு கொட்டகையில் மாநாடு நடைபெற்றது. இருபுறமும் தென்னங்கீற்றால் அடைக்கப்பட்ட மாநாட்டுப் பந்தலுக்குள் தந்தை பெரியார், காந்தியடிகள், தியாகராயர், டி.எம்.நாயர், ஏசுநாதர், லஜபதிராய், நாராயணகுரு உள்ளிட்டோரின் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

"வேற்றுமை மரம் வேரோடு வீழ்க!"
"கடவுளைக் காட்ட நமக்கு தரகர் ஏன்?"
"பார்ப்பன சூழ்ச்சியில் படாது பிழை"
"வேதமென்பது சூதன்றி வேறன்று!"
"கடவுள் கடவுளென காசைத் தொலையாதே!"
"சுயமரியாதையே சுதந்திரத்திற்கு வழி!"
"சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு"

போன்ற, சுயமரியாதை சிந்தனையைத் தூண்டும் பதாகைகள் ஆங்காங்கே மாட்டப்பட்டிருந்தன. கொட்டகையின் வாசலில் வளைவுப் பந்தல் போடப்பட்டு 'ஈ.வெ.ராமசாமிக்கு ஜே' என்று எழுதப்பட்டிருந்தது. பந்தலுக்கு அருகிலேயே சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டிருந்தது. பந்தல் முழுவதும் ஜமுக்காளம் விரிக்கப்பட்டு, பொதுமக்களும் சுயமரியாதை இயக்கத் தொண்டர்களும் தரையில் அமர்ந்தபடியே மாநாட்டைக் கவனித்தனர்.

திருச்சி இராவணதாஸ் தொடக்கத்தில், சுயமரியாதை கீதம் பாட, சிதம்பரம் பிள்ளை வரவேற்புரையாற்றினார். மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றிய பி.டி.ராஜன் (எம்.எல்.சி.),"பெரும் எதிர்ப்பைத் தகர்த்தெறிந்தே 'இந்துமத பரிபாலன மசோதா', 'சாரதா மசோதா' முதலிய முற்போக்கான சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். சீர்திருத்தத்தை எதிர்ப்பவர்கள் எப்பொழுதும் 'மதம் போச்சு' என்று கத்துவது வழக்கம்தான். இவர்கள் எக்காலத்தும் எல்லாத் தேசங்களிலும் இருந்து வருகின்றனர்" என மத அடிமைத்தனங்களில் இருந்து விடுபடுவதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

**கடவுளை வழிபட இடைத்தரகர்களுக்கு செலவிடும் பணத்தைக் கல்விக்கும், சுகாதாரத்திற்கும் பயன்படுத்தலாம்!**

வரவேற்புரையாற்றிய பி.சிதம்பரம் பிள்ளை, "சுயமரியாதை இயக்கம் கடவுளையும், கோயில்களையும் அழிப்பதற்காக தோற்றுவிக்கப்பட்டது என்று நம்மை எதிர்ப்பவர்கள் கூறுகிறார்கள். ஆனால், கடவுளுக்கும் கடவுளைத் தொழுபவனுக்கும் இடையே தரகன் வேண்டாம் என்பதே நமது கொள்கை. கடவுளை வழிபட இடைத்தரகர்களுக்கு செலவிடும் பணத்தைக் கல்விக்கும், சுகாதாரத்திற்கும் பயன்படுத்தலாம்" என்று ஆவேசமாக முழங்கினார்.

மாநாட்டின் இரண்டாவது நாளில், "பொதுக்கோயில்களில் இந்துக்கள் அனைவரும் தரிசனம் செய்ய உரிமை வேண்டும், வருணாசிரம தர்மத்தை ஆதரிக்கும் எந்த சங்கத்திலும் ஒருவரும் சேரக்கூடாது, சாதி வித்தியாசம் பாராட்டும் சடங்கிலும் எவரும் பங்கேற்கக்கூடாது, சாதி வித்தியாசங்களை ஒழிக்கும் பொருட்டு கலப்பு மணங்கள், சமபந்தி போஜனங்களை ஊக்குவிக்க வேண்டும்,

திருவிதாங்கூர் சமஸ்தானம் பார்ப்பனர்களுக்கு மட்டும் வழங்கும் சில தனித்த சலுகைகள் நீக்கப்பட வேண்டும், திருவிதாங்கூர் சமஸ்தானம் முழுக்க கட்டாயக் கல்வியை அமல்படுத்த வேண்டும்" என்பன உட்பட 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இம்மாநாட்டில், பெரியார் பங்கேற்பதாக இருந்த நிலையில், மலேசியப் பயணம் காரணமாக வர இயலவில்லை என்று 'குடிஅரசு' இதழில் வருத்தம் தெரிவித்தார். சாதியக் கெடுபிடிகளும், பார்ப்பனிய மேலாதிக்கமும் கொடிகட்டிப் பறந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அதன் அடிக்கட்டுமானத்தை அசைத்துப் பார்க்கும் விதமாக அமைந்தது இம்மாநாடு.

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **52**


**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## பேராசிரியர் ஊட்டும் இன-மொழி உணர்வு!

பானி பூரி வாங்கவும், திரைப்பட வசனங்களைப் புரிந்துகொள்ளவும், கெட்டவார்த்தை பேசவும் இந்தி கற்றுக்கொள்ளவேண்டும் என்று அண்மைக் காலமாக சில அதிமேதாவிகள் உளறி வருகிறார்கள். புதிய கல்விக் கொள்கையின் வழியாக மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்தி, இந்தியைத் திணிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய அரசின் ஊதுகுழல்கள் இசைக்கும், இது போன்ற அபத்த சுவரங்களை எல்லாம் நாளுக்கு நாள் கேட்க சகிக்க முடியவில்லை.

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக்கொள்கை பற்றிய நிலையினை அறிந்துகொள்ள நினைப்பவர்கள், அவசியம் வாசிக்கவேண்டிய நூல் இது.**

இந்தி திணிப்பு எதிர்ப்பில், நாம் செலுத்தும் அதே அக்கறையை மொழி-இன உரிமையைக் கேட்டுப் பெறுவதிலும் செலுத்த வேண்டும் எனும் நோக்கத்தை மையமாகக் கொண்டு அப்போதைய கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் 1970-களில் 'எனதருமைக் கழகத் தோழனே' என்று விளித்து மொழிப் பிரச்சனை பற்றி நம் கழகத் தோழர்களுக்கு மடல் எழுதினார்.




அப்போதைய கழகப் பொருளாளர் ஆற்காட்டார் அவர்களால் நடத்தப்பட்ட **'இனமுரசு'** இதழில் இந்தக் கடிதங்கள் தொடர்ச்சியாக வெளியாகின, 1998-ஆம் ஆண்டு மொழி உரிமை குறித்து வெளியான 30 மடல்கள் தொகுக்கப்பட்டு **'இன-மொழி வாழ்வுரிமைப் போர்'** எனும் தலைப்பில் நூலாக்கப்பட்டிருக்கிறது. அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிமுகவுரையோடு வெளியாகியிருக்கும் இந்நூல், பூம்புகார் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது.

'முரசொலி கேட்டுக் கேட்டுப் பயின்று இன உணர்வு கொண்ட செவிகட்கு இனமுரசு முழங்குவது கேட்கின்றதன்றோ!'என்று தனது முதல் மடலைத் தொடங்கும் பேராசிரியர் இந்தியத் துணைக் கண்டத்தில் மொழியின் பன்முகத்தன்மைகளை நமக்கு மிக விரிவாக விளக்குகிறார். தமிழ் மொழி உரிமைக்காக மட்டுமின்றி, இந்தியாவில் உள்ள பிற மொழிகளுக்காகவும் நாம்தான் போராட வேண்டும் தோழா, என்று பல இடங்களில் அவர் நம்மை உசுப்பி எழுப்புகிறார். மடல்களுக்கு இடையே வந்து செல்லும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய கவிதைகள், நம்முடைய மொழி உணர்வைத் தூண்டுகின்றன.

'மும்மொழித் திட்டம் மோசடித் திட்டமே!' போன்ற பல கட்டுரைகள் சமகால பொருத்தப்பாடுடையவை. இந்நூல் ஆதிக்க இந்தி எதிர்ப்பை மட்டுமல்லாமல், ஆட்சி மொழி, அலுவல் மொழி, பொது மொழி, வழக்காடுமன்ற மொழி என்று அன்றாடம் மொழி புழங்கும் பல்வேறு புலங்கள் குறித்து, நமக்கு அறிவூட்டுகிறது. குறிப்பாக, இந்தியா போன்ற பல்வேறு மொழிகள் பேசப்படும் நாட்டில் மக்களால் பயன்படுத்தப் படும் அனைத்து மொழிகளுக்கும் **'ஆட்சிமொழி'** அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று மிக அழுத்தமாக வலியுறுத்துகிறார்.


இந்தியைக் கற்றுக்கொண்டால் ஏற்படும் நன்மைகள்.. என்று காலம் காலமாக ஆதிக்கவாதிகள் பட்டியலிடும் அபத்தங்களை எல்லாம், இந்நூலில் பேராசிரியர் அவர்கள் நேரடியாக எதிர்கொண்டு, பதில் வழங்கி உள்ளார். இம்மடல்கள் எழுதப்பட்டு 40 ஆண்டுகளைக் கடந்திருந்தாலும், இதில் பேராசிரியர் நமக்கு ஊட்டும் இனமானம் நிறைந்த அறிவு சமகாலத்திலும் ஆதிக்க இந்தியை எதிர்கொள்ள உரமூட்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக்கொள்கை பற்றிய நிலையினை அறிந்துகொள்ள நினைப்பவர்கள், அவசியம் வாசிக்கவேண்டிய நூல் இது.

**...வாசிப்போம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

760

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.